திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக அலுவலகமான முரசொலி மாறன் வளாகத்தில், மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் க.நடராஜ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருப்பூர் வடக்கு மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் சிறப்புரையாற்றினார். இதில் மாநகரச் செயலாளர்கள் டி.கே.டி. மு.நாகராசன் திருப்பூர் தெற்கு, மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் திருப்பூர் வடக்கு, உள்பட மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு

முதல்வருக்கு தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் நன்றி - பாராட்டு!

புதுக்கோட்டை, அக். 20–

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 50 சதவீதமாக உள்ள அகவிலைப்படியை 01.07.2024 முதல் 53 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பை தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் பெரிதும் வரவேற்கிறது! நன்றி பாராட்டுகிறது!

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநிலப் பொதுச்செயலாளர் மன்றம் நா. சண்முகநாதன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:–

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் ஆசிரியர்அரசு அலுவலர்களுக்கு தீபாவளி பரிசாக 50 சதவீதமாக உள்ள அகவிலைப்படியை 01.07.2024 முதல் 53 சதவீதம் என 3 சதம் அகவிலைப்படி உயர்த்தி அறிவிப்புச் செய்துள்ளவற்றை தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் பெரும் மகிழ்வோடு பெரிதும் வரவேற்று பெரும் நன்றி பாராட்டுகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் அனைத்து வகை ஆசிரியர் அரசு அலுவலர்களின் எதிர்பார்ப்புகளையும் கோரிக்கைகளையும் விரைந்து நிறைவேற்றித்தந்து உதவிட வேண்டுமாய் எங்களது மாநில அமைப்பு பெரிதும் வேண்டி விரும்பிக் கேட்டுக்கெள்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற "நான் முதல்வன்" திட்டத்தின்கீழ் நடத்திய, உணவு பகுப்பாய்வு, தரக் கட்டுப்பாடு மற்றும் தர ஆராய்ச்சி பாடத் திட்டத்தின், அதிகாரபூர்வ பயிற்சி பங்களிப்பாளர் ரேர் மைண்ட் நிறுவனம் நடத்திய சிறப்பு வகுப்புகளில் வெற்றி பெற்ற ஹேக்கத்தான் வெற்றியாளர்களுக்கு, கோவை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் நா. கார்த்திக் கலந்து கொண்டு பரிசுகளையும்,சான்றிதழ்களையும் வழங்கி,வாழ்த்தி சிறப்புரையாற்றினார். "ரேர் மைண்ட்" நிறுவனத்தின் C.E.O.மற்றும் ஒருங்கிணைப்பாளர் டாக்டர்.சுபாஷிணி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கழகத்தினர் பலர் கலந்துகொண்டனர்.

மாவட்டச் செயலாளர் மதுரா செந்தில் சிறப்புரை!

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றம்!

நாமக்கல், அக்.20-

நாமக்கல் மேற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் 17.10.2024 வியாழக் கிழமை காலை 11.00 மணிக்கு திருச்செங்கோடு, வேலூர் ரோடு சி.ஹச்.பி காலனியில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக அவை தலைவர் இரா.நடனசபாபதி தலைமையில் நடைபெற்றது. நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் சிறப்புரை யாற்றினர்.

முடிவில் மாவட்ட கழக செயலாளர் அவர்கள் தலைமை கழகத்தில் அறிவிக்கப்பட்ட தீர்மானங்க ளின் அடிப்படையில் நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விளக்கிப் பேசினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :

தீர்மானம் - 01 இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை பெருமை தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராக பணியாற்ற வாய்ப்பளித்த கழக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நாமக்கல் மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

தீர்மானம் - 02 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கொள்கை வாய்ப்பு கழக தலைவர் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டி முரசொலி மாறன் அவர்களின் சகோதரர் முரசொலி நாளிதழின் முன்னாள் ஆசிரியருமான திரு.முரசொலி செல்வம் அவர்களுக்கு இறங்கல் தீர்மானம் நிறை வேற்றப்படுகிறது.

தீர்மானம் - 03 நாமக்கல், பொம்மைகுட்டை மேட்டில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கவும், புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டவும், முடிவடைந்த திட்டங்களை திறந்து வைக்கவும் வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என தீர்மானிக்கப்படுகிறது.

தீர்மானம் - 04 கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்பட்டி நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஊராட்சிகள் தோறும் பொது உறுப்பினர் கூட்டம் நடத்தி கழக பொது உறுப்பினர் அட்டை வழங்க வேண்டும் என தீர்மானிக்கப்படுகிறது.

இக்கூட்டத்தில் பரமத்தி வேலூர் தொகுதி பொறுப்பாளரான மாநில அயலக அணி துணைச் செயலாளர் உமாராணி, திருச்செங் கோடு தொகுதி பொறுப்பாளரான சேலம் கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அ. சீனிவாசன், குமாரபாளையம் தொகுதி பொறுப்பாளரான மாநில கொள்கைப் பரப்பு இணை செயலாளர் வி.சி. சந்திரகுமார், ஒன்றிய கழக செயலாளர்கள் கே. செல்வராசு, கு.பழனிவேல், ஜி.தங்கவேல், பி.பி.தனராசு, கே.கே.சண்முகம், எம்.தங்கவேல், ஏ.பி.ஆர்.சண்முகம், என். நாச்சிமுத்து, ஆர்.செல்வம், ஆ.இளங்கோ வன், நகர கழக செயலாளர்கள் டி.கார்த்தி கேயன், அ. குமார், டி.விஜய கண்ணன், எஸ்.ஞானசேகரன் பேரூர் கழக செயலாளர்கள் மு. திருமலை, ஆர். கருணாநிதி, எம்.ரமேஷ் பாபு, பி.முருகன், எம். ராமலிங்கம், பி. முருகவேல், எஸ்.ராமமூர்த்தி, எஸ்.பி.கார்த்திராஜ், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் வி.ஜி.அன்பழகன், கே.மயி ல்சாமி, எம்.சாந்தி, பொருளாளர் எம்.ராஜாராம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் எம்.வெங்கடாசலம், ஆர்.நடேசன், டி.ரங்கசாமி, ஓ.ஆர்.செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.ரவிச்சந்திரன், திருநாவுக்கரசு (எ) எஸ்.ஆர். பழனியப்பன், பி.பி.சாமிநாதன், பி.சிவக்குமார், ஆர்.வேலுமணி, எம்.இந்திராணிமயில்சாமி, திருச்செங்கோடு நகர்மன்ற தலைவர் நளினிசுரேஷ் பாபு, பள்ளிபாளையம் நகர்மன்ற தலைவர் செல்வராஜ், துணை தலைவர்கள் வெங்கடேசன், பாலமுருகன், பேரூராட்சி மன்ற தலைவர்கள் ராதாமணி, மணி, சோமசேகர், துணை தலைவர் ராஜா, மாவட்ட சார்பு அணி தலைவர்கள் அம்பிகா பாண்டியன், அருள் செல்வி, முரளி, அருண், மாப்பிள்ளை மீரான், பழனிவேலு, சரவண சுந்தரம், மணி (எ) மாரப்பன், சுப்ரமணியம், தமிழரசு, ராஜமாணிக்கம், தர்மராஜன், மீன் செல்வன், ஆனந்தன், மாதேஸ்வரன், முருகையன், மனோகரன், சுரேஷ்பாபு, அமைப்பாளர்கள் கௌதம், ரமேஷ், ஜோதி, ராதிகா, சரவணமுருகன், பெரியசாமி, சேக்தாவுத், ராஜவேல், ராஜவேலு, பாலாஜி, சுரேஷ்குமார், கண்ணன், ரவிமோகன், கந்தசாமி, சாதிக்பாட்ஷா, ரங்கசாமி (எ) குமார், பூபதி, கிரிசங்கர், மணியம், கருணாகரன், ரவிச்சந்திரன், தனகரன், பாலசுப்ரமணியம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

திருக்கோவிலூர், விழுப்புரம், விக்கிரவாண்டி, வானூர்

தொகுதிகளின் பாக முகவர்கள் கூட்டம்! அமைச்சர் க.பொன்முடி சிறப்புரை!

மாவட்டச் செயலாளர் பொன்.கௌதமசிகாமணி தலைமை! துரை கி.சரவணன் – சிவ.ஜெயராஜ், க.கார்த்திகேயன், கு.கருணாநிதி பங்கேற்பு!

விழுப்புரம், அக். 20-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைக்கிணங்க விழுப்புரம் (தெற்கு) மாவட்டத்திற்கு உட்பட்ட திருக்கோவிலூர் , விழுப்புரம், விக்கிரவாண்டி மற்றும் வானூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளை சேர்ந்த பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கத்தில் மாவட்டக் கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற்றது.

கழக துணைப் பொதுச் செயலாளர், வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி கலந்து கொண்டு பாக முகவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள், 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் மற்றும் வெற்றிக்கான மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். தலைமைக் கழக தொகுதி மேற்பார்வையாளர்கள் துரை கி.சரவணன் (விழுப்புரம்) , சிவ.ஜெயராஜ் (விக்கிரவாண்டி) க.கார்த்திகேயன் (திருக்கோவிலூர்) கு.கருணாநிதி (வானூர்) ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.

மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் , சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா , இரா. இலட்சுமணன் , மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் , மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ் , மாவட்ட துணை செயலாளர்கள் தயா.இளந்திரையன், இரா.கற்பகம் , மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மோ.தேன்மொழி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் , ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் , பாக முகவர்கள் (B.L.A. 2) , கிளைக் கழக செயலாளர்ள் , வார்டு செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

இன்று நடைபெறுகிறது!

ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

அமைச்சர் – மாவட்டச் செயலாளர் சு.முத்துசாமி அறிவிப்பு!

ஈரோடு, அக். 20-

ஈரோடு தெற்கு மாவட்டக் கழகக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

இக்கூட்டம் குறித்து மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (20.10.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில் மணல்மேட்டில் உள்ள மாவட்ட அலுவலகம், கலைஞர் அறிவாலயத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் கே. குமார் முருகேஷ் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் ஈரோடு தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்

பொருள்: தொகுதிப் பார்வையாளர்கள் அறிமுகம்

வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல் / நீக்கல் பணிகள்

கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி தெரிவித்துள்ளார்.

தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

தென்காசி வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிவிப்பு!

தென்காசி வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட கொ.பிரகாஷ், தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்ட காரணத்தால், அவருக்குப் பதிலாக **ஜெ. ஜலால்மைதீன்** (42, தமிழ் குடில், காயிதேமில்லத் 2வது தெரு, சங்கரன்கோவில், தென்காசி மாவட்டம்) அவர்கள் தென்காசி வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளராகவும்;

மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட சேதுசுப்பிரமணியன் அவர்கள் பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால், அவரை மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, ரா. மகேஷ்குமார் (203/2, மேற்குத் தெரு, குவளைகண்ணி, சங்கரன்கோவில், தென்காசி மாவட்டம்) தென்காசி வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட அணி நிர்வாகிகளுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

"அண்ணா அறிவாலயம்" கார்த்திகேய சிவசேனாபதி,
சென்னை - 18 செயலாளர்,
நாள்- 18.10.2024 தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில்

புதிய மின்மாற்றிகள்! 285 மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்து வழங்கினார்!

புதுக்கோட்டை, அக். 20-

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், புதிய மின்மாற்றிகளை சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 18.10.2024 அன்று துவக்கி வைத்து, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில், மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

பின்னர் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய பொதுமக்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்திடும் வகையில் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் கிராமப்புறங்களுக்கு தேவையான சாலை வசதி, மின்வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில், திருமயம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் புதிய மின்மாற்றிகளை துவக்கி வைத்து, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது.

அதன்படி, திருமயம் ஊராட்சி ஒன்றியம், கே.பள்ளிவாசல் மற்றும் கீழகுளத்துப்பட்டி ஆகிய கிராமங்களில் புதிய மின்மாற்றிகள் துவக்கி வைக்கப்பட்டது. இதன்மூலம் இப்பகுதியில் உள்ள வீடுகள், விவசாயம், வணிக நிறுவனங்களுக்கு சரியான அளவுகளில் சீரான மின்விநியோகம் வழங்கப்படும்.

அதனைத் தொடர்ந்து, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், பொன் புதுப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் 158 மாணவிகளுக்கும், மேலத்தானியம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 27 மாணவர்களுக்கும், 38 மாணவிகளுக்கும், நல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 36 மாணவர்களுக்கும் 26 மாணவிகளுக்கும் என ஆகமொத்தம் 285 மாணாக்கர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாணவ, மாணவிகள் அனைவரும் தாங்கள் பெற்றுக்கொண்ட இந்த விலையில்லா மிதிவண்டியின் மூலம் நாள்தோறும் பள்ளிக்கு உரிய நேரத்திற்குள் சென்று வருவதற்கு உறுதுணையாக இருக்கும்.

எனவே, தமிழக அரசின் இதுபோன்ற நலத்திட்டங்களை பொதுமக்கள், மாணவ, மாணவிகள் உள்ளிட்ட அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொண்டு தங்களது வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அ.அக்பர் அலி, முதன்மைக் கல்வி அலுவலர் கூ.சண்முகம், மின்சார வாரிய செயற்பொறியாளர் எம். ஆனந்தாய், ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம்,

பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் சுந்தரி அழகப்பன், புதுக்கோட்டை மாவட்ட கல்வி அலுவலர் ஆ.ரமேஷ், பெற்றோர் - ஆசிரியர் கழகத் தலைவர் அ.முத்து, வட்டாட்சியர்கள் புவியரசன் (திருமயம்), எம்.சாந்தா (பொன்னமராவதி), மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் முனைவர். சாலை செந்தில், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தருமபுரி கிழக்கு மாவட்டம் பென்னாகரம் மற்றும் ஏரியூர் காட்டூர்,கருங்காலி மேடு பகுதிகளில் இருந்து பென்னாகரம் தெற்கு ஒன்றிய கட்சி அலுவலகத்தில் முன்னாள் மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ. பி.என்.பி.இன்பசேகரன் தலைமையில் 100க்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்.உடன் ஒன்றிய செயலாளர்கள் ஏரியூர் என்.செல்வராஜ்,முருகேசன், பென்னாகரம் பேரூர் கழக செயலாளர் எம்.வீரமணி,பேரூராட்சித் துணைத் தலைவர் வள்ளியம்மாள் பவுன்ராஜ் உள்ளிட்ட கழகத்தினர் கலந்துகொண்டனர்.

நாமக்கல் மேற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் திருச்செங்கோடு, வேலூர் ரோடு சி.ஹச்.பி காலனியில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட கழக அவை தலைவர் இரா.நடனசபாபதி தலைமையில் நடைபெற்றது. நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் சிறப்புரையாற்றினார்.

தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு முன்னாள் ஒன்றியக் கழகச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், ஒன்றிய பெருந்தலைவர் ஒரத்தநாடு மு.காந்தி அவர்களின் நான்காம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ராமச்சந்திரன், வெங்கடேஸ்வரன், மணவழகன், கார்த்திகேயன், முருகையன், முகில், வேந்தன், மு.கா. கார்த்திக், கரிகாலன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.